செய்திக்குறிப்பு dt: 12.2.18

காரைக்கால் மாவட்டம் நெடுங்காட்டுக்கு அருகில் உள்ள செல்லூர் கிராமத்தை இன்று அதிகாரிகளுடன் மக்களின் குறைகளை கேட்டறிந்தார்கள். சுமார் 300 குடும்பங்கள் வசிக்கின்ற செல்லூர் கிராமத்தையும் பார்வையிட்ட மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள் செல்லூர் தெருத் தெரு வீதியை பார்வையிட்டார்கள். சுமார் 40. வீடுகள் இருக்கும் அவ்விடத்தையும் பார்வையிட்டு முதலில் கழிப்பறை வசதிகள் செய்து தரப்படும். கூரை வீடுகளை கல்வீடாக நிரந்தரமாக மாற்றி அமைக்கப்படும் அதிகாரிகளுடன் கூறிய அமைச்சர் அவர்கள் கெயில் கேஸ் நிறுவனத்தின் மூலம் இது வரை சுமார் பதினோராயிரம் வீடுகளுக்கு சிலிண்டர் வழங்கப்பட்டுள்ளது எனவும் மேலும் இரண்டாயிரம் வீடுகளுக்கு மேல் விடுபட்டுள்ளது எனவும் ஊர் மக்கள் கூறினர். உடனே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கெயில் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு கேட்கையில் மார்ச் மாதத்துக்குள் மேலும் 500 வீடுகளுக்கு கேஸ் இணைப்பு அளிக்கப்படும் என்று கூறினார்கள். பெரும்பாலான ஊர் மக்கள் நாங்கள் ஏழ்மையான மற்றும் பின்தங்கிய மக்களாக உள்ளோம் எங்களுக்கு சிகப்பு நிற Ration Card வழங்கும்படி அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்கள். இது விரைவில் நிறைவேற்றி வைக்கப்படும் என அமைச்சர் மற்றும் அரசு ஆட்சியர்

-2-

ஆகியோர் பொதுமக்களிடம் கூறினார்கள். மேலும் அவ்வூர் மக்கள் பெயர்களுக்கு பட்டா மாற்றித் தரும்படியும் இங்கு நிறுவப்பட்டுள்ள சோலார் விளக்குகளை இயக்கி வைக்கும்படியும் கூறினார்கள். மேலும் அமைச்சர் உரையில் இவ்வூர் இளைஞர்களுக்கு மன்றம் ஒன்று ஆரம்பித்து (இளைஞர் மன்றம்) இதன் மூலம் நீங்கள் உங்கள் உள்ள குறைகளை ஆட்சியரிடம் தெரியபடலாம் என கூறினார்கள். உடன் சார்பு ஆட்சியர் திரு. A. விக்ராந்த் ராஜா இ.ஆ.ப. தாசில்தார் திரு. பொத்து. வட்டார வளர்ச்சி அதிகாரி திருமதி. ரேவதி ஆகியோர் கலந்து கொண்டனர்கள்.

12/2/18